*பாடம் - 10*

الدرس العاشر

## மதீனாவில் நபிகள் நாயகம்

## النبي ﷺ في المدينة

நபிகள் நாயகம்(ஸல்) அவர்கள் ஒட்டகம் படுத்த இடத்தை அதற்குரியவர் களிடமிருந்து விலைக்கு வாங்கிய பின் அந்த இடத்தில் பள்ளிவாசலைக் கட்டி னார்கள். முஹாஜிர்களுக்கும் அன்ஸாரிகளுக்குமிடையே நபிகள் நாயகம் (ஸல்) அவர்கள் சகோதர பந்தத்தை ஏற்படுத்தினார்கள். (மக்காவைத் துறந்து மதீனா வந்தவர்கள் முஹாஜிர்கள். முஹாஜிர்களுக்கு உதவிசெய்த மதீனா வாசிகள் அன்ஸாரிகள்) அதாவது முஹாஜிர் ஒவ்வொருவரையும் அன்ஸார் களில் ஒவ்வொருவருக்கும் சகோதரர்களாக்கி அவர்களின் சொத்துக்களில் பங்குதாரர்களாக்கினார்கள். முஹாஜிர்களும் அன்ஸாரிகளும் ஒன்றாகவே செயல்படத் தொடங்கினர். அவர்களிடையே சகோதரத்துவ பந்தம் அதிகரித்தது. மதீனாவில் இஸ்லாம் பரவ ஆரப்பித்தது. சில யூதர்களும் இஸ்லாத்தை ஏற்றனர். இவ்வாறு இஸ்லாத்தை ஏற்ற யூதர்களில் அப்துல்லாஹ் பின் ஸலாம் (ரலி) அவர்களும் ஒருவர். இவர் யூதர்களின் பாதிரிமார்களில் ஒருவராகவும் அவர்களின் பெருந்தலைவர்களில் முக்கியமானவராகவும் திகழ்ந்தார்.

முஸ்லிம்கள் மக்காவை விட்டு ஹிஜ்ரத் செய்த பிறகும் கூட மக்காவின் இறைநிராகரிப்பாளர்கள் முஸ்லிம்களை எதிர்ப்பதை கைவிடவில்லை. எவ்வாறெனில் குறைஷிகளுக்கு மதீனாவிலுள்ள யூதர்களுடன் தொடர்பிருந்தது. எனவே அந்த யூதர்களும் குறைஷிகளின் வழியில் முஸ்லிம்களிடையே பிரிவினையையும் குழப்பங்களையும் தோற்றுவிக்க முயற்சித்தார்கள். குறைஷிகளும் முஸ்லிம்களை அச்சுறுத்திக் கொண்டும் அவர்களை தீர்த்துக்கட்டி விடுவோம் என்று எச்சரித்துக் கொண்டுமிருந்தனர். இவ்வாறாக முஸ்லிம்களுக்கு மதீனாவின் உள்ளேயும் வெளியேயும் ஆபத்துக்கள் சூழ்ந்திருந்தன. தற்காப்பு ஆயுதங்கள் இல்லாமல் நபித்தோழர்கள் இரவைக் கழிக்க முடியாத அளவுக்கு நிலமை சென்று விட்டிருந்தது.

இந்த ஆபத்தான காலகட்டத்தில் தான் அல்லாஹ் போர் செய்வதற்கு அனுமதி யளித்தான். நபிகள் நாயகம்(ஸல்)அவர்கள் எதிரிகளின் நடவடிக்கைகளைத் தெரிந்து கொள்வதற்காகவும் எதிரிகளின் வியாபாரக் கூட்டத்தினர் மீது தங்களின் பிடியை இறுக்கிக் கொள்வதற்காக அவர்களை வழிமறிப்பதற்காகவும் சிறு சிறு படைகளை அனுப்ப ஆரம்பித்தார்கள். இதன் நோக்கம் முஸ்லிம்களின் வலிமையை அவர்களுக்கு உணர்த்த வேண்டும். அதனால் அவர்கள் முஸ்லிம்களுடன் இணக்கமாகி முஸ்லிம்களை இஸ்லாத்தின்படி செயல்படுவதற்கும் இஸ்லாத்தைப் பரப்புவதற்கும் சுதந்திரமாக விட்டுவிட வேண்டும் என்பதுதான். அதுபோல சில கூட்டத்தாருடன் நேச உடன்படிக்கையும் செய்து கொண்டார்கள்.

**பத்ரு போர்** - ஒரு நாள் நபிகள் நாயகம்(ஸல்) அவர்கள் ஷாம் தேசத்திலிருந்து திரும்பி வந்துகொண்டிருந்த குறைஷிகளின் வியாபாரக் கூட்டம் ஒன்றை வழிமறிக்க முடிவு செய்து 313 பேருடன் புறப்பட்டுச் சென்றார்கள். அவர்களுடன் இரண்டு குதிரைகளும் 70 ஒட்டகங்களும் மட்டுமே இருந்தன. குறைஷிகளின் அந்த வியாபாரக் கூட்டத்திடம் ஆயிரம் ஒட்டகங்கள் இருந்தன. அக்கூட்டத்தினரை அபூசுஃப்யான் வழிநடத்தி வந்தார். அவருடன் 40 பேர் இருந்தனர். ஆயினும் முஸ்லிம்கள் புறப்பட்டு வருவதை அறிந்த அபூசுஃப்யான் மக்காவிற்குச் செய்தி அனுப்பி உதவி தேடினார். மேலும் தனது வழியை மாற்றி வேறு வழியில் சென்றார். முஸ்லிம்களால் அவர்களை வெல்ல முடியவில்லை. குறைஷிகளோ ஆயிரம் படைவீரர்களுடன் புறப்பட்டு வந்தனர். எனினும் அவர்களிடம் அபூசுஃப்யானிடமிருந்து ஒரு தூதர் வந்து வியாபாரக்கூட்டம் தப்பித்து விட்டதைத் தெரிவித்து மக்காவிற்கே திரும்பிச் செல்லும்படி வேண்டினார். ஆனால் அவ்வாறு திரும்பிச் செல்ல அபூஜஹ்ல் மறுத்துவிட்டான். குறைஷிகளின் படை தொடர்ந்து பயணமாகி பத்ரு மைதானத்தை அடைந்தது.

குறைஷிகள் புறப்பட்டு வருவதை அறிந்த நபிகள் நாயகம்(ஸல்) தமது தோழர்களிடம் கலந்தாலோசித்தார்கள். அனைவரும் இறைநிராகரிப்பாளர்களோடு போர் செய்ய சம்மதம் தெரிவித்தனர். ஹிஜ்ரி இரண்டாம் ஆம் ஆண்டு ரமலான் மாதத்தில் ஒரு நாள் காலை இரு படைகளும் நேருக்கு நேர் சந்தித்து கடும் போர் செய்தனர். முஸ்லிம்களின் வெற்றியுடன் போர் முடிந்தது. முஸ்லிம்களில் 14 பேர் உயிர்த்தியாகம் செய்தனர். இணைவைப்பவர்களில் 70 பேர் கொல்லப்பட்டனர். 70 பேர் சிறை பிடிக்கப்பட்டனர். இந்தப் போர் நடந்து கொண்டிருக்கும்போதே நபிகள் நாயகம் (ஸல்) அவர்களின் மகளும் உஸ்மான்(ரலி) அவர்களின் மனைவியுமான ருகைய்யா (மதீனாவில்) மரணமடைந்தார்கள். உஸ்மான்(ரலி) அவர்களை நோயாளியாக இருந்த அவர்களது மனைவிருகையாவுடன் இருக்குமாறு நபியவர்கள் கேட்டுக் கொண்டதால் உஸ்மான்(ரலி) அவர்கள் போருக்கு வராமல் தமது மனைவியுடன் மதினாவிலேயே தங்கிவிட்டார்கள். இப்போருக்குப் பிறகு உஸ்மான் (ரலி) அவர்களுக்கு நபிகள் நாயகம் (ஸல்) அவர்கள் தமது இரண்டாவது மகள் உம்மு குல்ஸூமை மணமுடித்துக் கொடுத்தார்கள். நபிகள் நாயகத்தினுடைய இரு பெண் மக்களை மணந்து கொண்டதால் உஸ்மான்(ரலி) அவர்கள் 'துன் நூரைன்' -இரண்டு பிரகாசம் உடையவர்- என்ற சிறப்புப் பெயர் பெற்றார்கள்.

பத்ருப்போர் முடிந்த பின்னர் முஸ்லிம்கள் அல்லாஹ்வின் உதவி குறித்து மகிழ்ச்சியடைந்தவர்களாக மதீனாவுக்குத் திரும்பினர். கைதிகளையும் தங்களுடன் அழைத்து வந்தனர். போரில் கிடைத்த பொருட்களும் இருந்தன. கைதிகளைப் பொறுத்த வரை சிலர் பிணைத் தொகை கொடுத்து விடுதலை பெற்றார்கள். வேறு சிலர் பிணைத் தொகையின்றி விடுதலை பெற்றார்கள். மற்றும் சிலரோ முஸ்லிம் பிள்ளைகளில் பத்து பேருக்கு எழுதப் படிக்கக் கற்றுக் கொடுத்து அதையே நஷ்டயீடாகத் தந்து விடுதலை பெற்றார்கள்.